தரம் 7	தி / கிண் / அல் - அஹ்லா வித்தியாலயம் T / KIN / AL – AHLA VIDYALAYA	புள்ளி
புவியியல்	முதலாம் தவணைப் பரீட்சை - 2020	பகுதி I & II
சுட்டெண்:	நேரம் : இரண்டு மணித்தியாலம்	

✷ **எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.**

01. உயிரினங்களுக்குச் சாதகமான சூழல் காணப்படுகின்ற கோள்

(1). வியாழன் (2). புதன் (3). சூரியன் (4). புவி

02. புவி தனது அச்சில் சுழன்றுகொண்டு சூரியனையும் சுற்றி வருவது

(1). புவிச்சுழற்சி (2). புவிச்சுற்றுகை (3). சந்திரகிரகணம் (4). சூரியகிரகணம்

03. புவி சூரியனைச் சுற்றிவர எடுக்கும் காலம்

(1). ஒரு நாள் (2). ஒரு வருடம் (3). 30 நாள் (4). 6 மாதம்

04. விண்வெளியிலிருந்து எடுக்கப்பட்ட புவியினது ஒளிப்படம் புவியை எவ் வடிவம் என உறுதிப்படுத்துகின்றது.

(1). வட்டம் (2). கோளம் (3). தட்டை (4). உருளை

05. புவியின் மத்திய கோட்டு விட்டம்

(1). 12757Km (2). 12714Km (3). 40077Km (4). 39943Km

06. மனிதனால் உருவாக்கப்பட்ட கற்பனைக் கோடுகள்

(1). அகலக்கோடு (2). நெடுங்கோடு
(3). அகலாக்கோடும், நெடுங்கோடும் (4). சர்வதேச திகதிக் கோடு

07. கோளத்தின் மத்தியில் கிடையாக அமைந்துள்ள கோடு

(1). கடகக்கோடு (2). மகரக்கோடு (3). மத்தியகோடு (4). கிறீன்விச்கோடு

08. நீரினால் சூழப்பட்ட பரந்த நிலப்பரப்பு

(1). தீவு (2). தீபகற்பம் (3). கண்டம் (4). சமுத்திரம்

09. நீரினால் சூழப்பட்ட சிறிய நிலப்பகுதி

(1). தீபகற்பம் (2). நாடு (3). தீவு (4). நகரம்

10. கண்டங்களுக்கு அருகிலும், உள்ளகப்பகுதியிலும் அமைந்துள்ள சிறிய நீர்ப்பகுதிகள்

(1). சமுத்திரங்கள் (2). கடல்கள் (3). நீர்நிலைகள் (4). ஏரி

11. ஆசியாக் கண்டத்தினுல் அமைந்துள்ள கடல்

(1). வடகடல் (2). செங்கடல் (3). ஏரல்கடல் (4). தஸ்மன் கடல்

12. இலங்கை இந்தியாவிலிருந்து மிக ஒடுங்கிய ஆழமற்ற கடலினால் பிரிக்கப்பட்டுள்ளது.

(1). பாக்குநீரிணை (2). இந்து சமுத்திரம் (3). அராபிக்கடல் (4). செங்கடல்

www.ikedu.lk

13. அகலக்கோடு, நெடுங்கோடு என்பவற்றுக்கமைய நாட்டின் அமைவிடத்தைக் காட்டுதல்
(1). தனி அமைவிடம் (2). சார்பமைவிடம்
(3). புவியியல் அமைவிடம் (4). அண்மிய அமைவிடம்

14. அண்மித்த சுற்றுப் புறத்திலுள்ள நிலப்பகுதி மற்றும் சமுத்திரம் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்டு நாட்டின் அமைவிடத்தைக் காட்டுதல்
(1). சார்பு அமைவிடம் (2). தனி அமைவிடம்
(3). புவியியல் ரீதியான தனித்துவம் (4). இலங்கையின் அமைவிடம்

15. இலங்கை அமைந்துள்ள வலயம்
(1). அயன வலயம் (2). இடைவெப்ப வலயம் (3). குளிர் வலயம் (4). ஆட்டிக்வட்டம்

16. இலங்கையின் தென்மேற்கு, வடகிழக்குத் திசைகளிலிருந்து நாட்டினுல் பிரவேசிக்கும் பருவகால காற்றோட்டங்கள்

(1). மேற்காவுகை (2). சூறாவளி (3). பருவக்காற்று (4). சுனாமி

17. வங்களா விரிகுடாவில் உருவாகும் காற்றுக் குழப்பங்களினால் உருவாகுவது
(1). தென்மேல் பருவக்காற்று மழை (2). வடகீழ் பருவக்காற்று மழை
(3). மேற்காவுகை மழை (4). சூறாவளி மழை

18. பொதுவாக இலங்கையில் வரண்ட காலநிலை நிலவும் மாதம்
(1). பெப்ரவரி மற்றும் ஆகஸ்ட் (2). நவம்பர், டிசம்பர்
(3). மார்ச், ஏப்ரல் (4). யூன், யூலை


19. சர்வதேச சமுத்திர சட்டத்திற்கமைய ஒரு நாட்டின் ஆட்புலகடல் எல்லை
(1). 22 கடல்மைல் (2). 32 கடல்மைல் (3). 12 கடல்மைல் (4). 20 கடல்மைல்

20. இலங்கையின் கடற்கரையோரங்களிலும், ஆற்றுமுகங்களிலும் காணப்படும் தாவரம்
(1). பசுமையான காடுகள் (2). புல் நிலங்கள்
(3). கண்டல் தாவரங்கள் (4). முட்பற்றைக் காடுகள்

பகுதி II

✷ **எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.**

01. கீழே தரப்பட்டுள்ள உலகப்படத்திற் காட்டப்பட்டுள்ள ஆங்கில எழுத்துக்கள் குறிக்கும் இடங்களை உரிய இடங்களுக்கு எதிரே அடைப்பிற்குள் எழுதுக.



www.ikeu.lk

(1). இலங்கை ( )
(2). ஆபிரிக்கா ( )
(3). பசுபிக் சமுத்திரம் ( )
(4). கஸ்பியன் கடல் ( )
(5). அத்திலாந்திக் சமுத்திரம் ( )
(6). டோக்கியோ ( )
(7). செங்கடல் ( )
(8). வட அமெரிக்கா ( )
(9). பிரித்தானியா ( )
(10). அவுஸ்திரேலியா ( )
(11). பாக்கு நீரிணை ( )
(12). ஆசியா ( )

02. கீறிட்ட இடங்களை நிரப்புக.

1) இலங்கைக்கு வடக்கே (1) ..... கண்டமும், தெற்கே (2) ..... சமுத்திரமும், கிழக்கே (3) ..... நாடுகளும், மேற்கே (4) ..... கண்டமும் அமைந்துள்ளன.


2) இலங்கையின் பரப்பளவினைக் கருதும் போது, தெய்வேந்திர முனையிலுருந்து (1)..... முனை வரை (2)..... km நீளத்தையும், (3)..... இலிருந்து சங்கம் கந்த முனைவரை (4)..... km அகலத்தையும் கொண்டுள்ளது.

3) இலங்கை (1)..... கோட்டிற்கு அண்மையில் அயனவலயத்தில் அமைந்துள்ள நாடு, இலங்கைக்கு பிரதானமாக மேற்காவுகை, (2)..... பருவக்காற்று ஆகியன மூலம் மழை கிடைக்கின்றது. இலங்கையில் ஈரலிப்பான பகுதியில் (3)..... காடுகள் பரந்து காணப்படுகின்றன. மலைப் பிரதேசங்களில் உயரம் குறைந்த தாவரங்கள் மேட்டு நிலங்களை அண்மித் பகுதியில் பத்தன, (4)..... புல் நிலங்களையும் காணலாம்.

03.

1) அகலக்கோடுகள், நெடுங்கோடுகள் என்றால் என்ன?


2) தரப்பட்டுள்ள படத்தில் A,B,C,D,E ஆகிய எழுத்துகளால் குறிக்கப்பட்ட அகலக்கோடுகளைப் பெயரிடுக.



3) 180^{o} நெடுங்கோடு எப் பெயரால் அழைக்கப்படும்

www.ikeju.lk

04. 1). A,B,C எனக் குறிப்பிடப்பட்ட இலங்கையின் தரைத்தோற்ற வலயங்கள் மூன்றையும் பெயரிடுக



A : .....

B : .....

C : .....

2). அட்டவணையில் தரப்பட்டுள்ள இடைவெளிகளுக்குப் பொருத்தமான விடைகளை கீழே தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து எழுதுக.

(300m ற்கு மேல், எச்சக்குன்றுகள், மட்டக்களப்பு, 0 – 30m, நுவரேலியா, உள்ளகச் சமவெளி, மிகிந்தலை, நீர்வீழ்ச்சி. கடல்நீரேரி)

தரைத்தோற்ற வலயம்	**காணப்படும் இடங்கள்**	**சிறப்பான தரைதோற்ற அம்சங்கள்**	**கடல் மட்டத்திலிருந்தான உயரம்**
மத்திய மலைநாடு	கண்டி (2).....	கணவாய் (5).....	(8).....
(1).....	(3).....	(6).....	30 – 300m
கரையோரச் சமவெளி	பொலநறுவை (4)..... யாழ்ப்பாணம்	குடா (7).....	(9).....

05. எல்லா வினாக்களுக்கும் விடையளிக்குக.

1) ‘‘புவி ஒரு முழுமையான கோளம் அல்ல’’ என்பதற்கான ஆதாரத்தை தருக.
2) புவிச்சுழற்சி, புவிச் சுற்றுகை என்பன பற்றி சுருக்கமாக விளக்குக.
3) சமுத்திரங்கள், கடல்கள் என்றால் என்ன என்பதனை விளக்குக.
4) நாட்டின் சார்பமைவிடம் என்றால் என்ன?
5) இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள தீவுகள் நான்கு தருக.
6) இலங்கையின் தனி அமைவிடத்தை குறிப்பிடுக.
7) இலங்கை மழைவீழ்ச்சி பெறும் மூன்று முறைகளும் எவை?
8) இலங்கையின் வெவ்வேறு பிரதேசங்களில் வளரும் தாவரங்களின் இயல்புகளைக் குறிப்பிடுக.

www.lkedu.lk